விரைவு நீதிமன்றம், காரைக்குடி.
முன்னிலை: திரு.G.பிரபாகரன்,B.A.,B.L.,
நீதித்துறை குற்றவியல் நடுவர்,
விரைவு நீதிமன்றம்,காரைக்குடி.

2019-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் திங்கட்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1/18

புகார்தாரர்	ராமநாதன் (43/17), த.பெ.செல்லப்பன், கதவு எண்.3/565,வைரவபுரம் முதல் வீதி, அழகப்பாபுரம் அஞ்சல்,காரைக்குடி-3.
குற்றஞ்சாட்டப்பட்டவர்	தேவி (52/18), க.பெ.மணியரசன், திருப்பத்துார் ரோடு, கண்டரமாணிக்கம், திருப்பத்துார் வட்டம்.
குற்றம்முறையிடப்பட்டது	எதிரி மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ்.
குற்றம் கோப்பிற்கு எடுக்கப்பட்டது	எதிரி மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ்.
குற்றம் பற்றி வினவப்பட்டது	எதிரியிடம் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ்.
தீர்வு	எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்வு.

இவ்வழக்கு கடந்த 2.1.2018-ம் தேதி இந்நீதிமன்றக்கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு கடந்த 22.2.2019-ம் தேதியில் என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபொழுது புகார்தாரருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.ஆர்.முத்து அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எஸ்.கௌதம் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இரு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்

தீ ர் ப் பு ரை:-

புகார்தாரரிடம் கடந்த 25.10.2017-ம் தேதியன்று எதிரி அவரது சொந்த வீடு கட்டும் செலவிற்காக கடனாக ரொக்கம் ரூ.6,20,000/- (ஆறு லட்சத்து இருபதாயிரம்)த்தை பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி போட்டு கொடுப்பதாக ஒப்புக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் ஓர் பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்திருக்கிறார் என்றும் அப்பால், புகார்தாரரிடம் கடந்த 27.11.2017-ம் தேதியன்று 457399 என்ற எண்ணுள்ள ரூ.6,20,000/- (ஆறு லட்சத்து இருபதாயிரம்)த்திற்குண்டான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கண்டரமாணிக்கம் கிளை காசோலை ஒன்றை எதிரி கொடுத்துள்ளார் என்றும் அதை புகார்தாரர் அன்றே தான் கணக்கு வைத்திருக்கும் பேங்க் ஆப் பரோடா, காரைக்குடி கிளையில் வசூலுக்காக சமர்ப்பித்தபொழுது அது கடந்த 28.11.2017-ம் தேதியிட்ட போதிய பணமில்லை என்ற குறிப்புச்சீட்டுடன் அதன் மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்டுவிட்டது என்றும் இதுசம்மந்தமாக புகார்தாரர் கடந்த 5.12.2017-ம் தேதி எதிரிக்கு ஓர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும் அதை எதிரி கடந்த 6.12.2017-ம் தேதியன்று பெற்றுக்கொண்டு பல பொய்யான விபரங்களை சொல்லி கடந்த 27.12.2017-ம் தேதியன்று ஓர் பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும் அதன்பின்னரும் பணம் செலுத்தவில்லை என்றும் எதிரியின் மேற்படி செய்கையானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் தண்டிக்கப்படவேண்டிய ஒன்று என்று இந்த தனி நபர் புகாரானது கு.வி.மு.ச பிரிவு 200-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

2) இவ்வழக்கில், புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற புகார் மனு, அபிடவிட் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றம் புரிந்திருக்கிறார் என்பதற்கு போதிய முகநுட்ப ஆதாரங்கள் இருந்ததால் இவ்வழக்கு மேற்படி பிரிவின் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்ட பின்னர் எதிரிக்கு அழைப்பாணை கு.வி.மு.ச பிரிவு 204-ன் கீழ் வழக்கு நகலோடு அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது எதிரியிடம் மேற்படி பிரிவின் கீழ் குற்றம் பற்றி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே புகார்தாரர் தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3) அதனடிப்படையில், புகார்தாரர் தரப்பில் ஒரு சாட்சி விசாரணை செய்யப்பட்டு, ஆறு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. எதிரி தரப்பில் இரண்டு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு ஒரு சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது.

4) <u>புகார்தாரர் தரப்பு வழக்கும் மற்றும் சாட்சிய சுருக்கமும் பின்வருமாறு:-</u>

ம.சா.1 புகார்தாரர் ராமநாதன் தன் சாட்சியத்தில், தன்னிடம் கடந்த 25.10.2017-ம் தேதியன்று எதிரி அவரது சொந்த வீடு கட்டும் செலவிற்காக கடனாக ரொக்கம் ரூ.6,20,000/- (ஆறு லட்சத்து இருபதாயிரம்)த்தை பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி போட்டு கொடுப்பதாக ஒப்புக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் ஓர் பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்திருக்கிறார் என்றும் அப்பால், புகார்தாரரிடம் கடந்த 27.11.2017-ம் தேதியன்று 457399 என்ற எண்ணுள்ள ரூ.6,20,000/- (ஆறு லட்சத்து இருபதாயிரம்)த்திற்குண்டான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கண்டரமாணிக்கம் கிளை காசோலை ஒன்றை எதிரி கொடுத்துள்ளார் என்றும் அது ம.சா.ஆ.1 என்றும் அதை தான் அன்றே தான் கணக்கு வைத்திருக்கும் பேங்க் ஆப் பரோடா, காரைக்குடி கிளையில் வசூலுக்காக சமர்ப்பித்தபொழுது அது கடந்த 28.11.2017-ம் தேதியிட்ட போதிய பணமில்லை என்ற குறிப்புச்சீட்டுடன் அதன் மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்டுவிட்டது என்றும் அந்த குறிப்புச்சீட்டின் அசல் ம.சா.ஆ.2 என்றும் இதுசம்மந்தமாக தான் கடந்த 5.12.2017-ம் தேதி எதிரிக்கு ஓர் அறிவிப்பு அனுப்பினேன் என்றும் அந்த அறிவிப்பின் அலுவலக நகல் ம.சா.ஆ.3 என்றும் அதை எதிரி கடந்த 6.12.2017-ம் தேதி பெற்றுக்கொண்டார் என்பதற்குண்டான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல் ம.சா.ஆ.4 என்றும் அதன்பின்னர் பல பொய்யான விபரங்களை சொல்லி கடந்த 27.12.2017-ம் தேதியன்று எதிரி ஓர் பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும் அந்த அறிவிப்பின் சார்பு நகல் ம.சா.ஆ.5 என்றும் தனக்கு எதிரி எழுதிக்கொடுத்திருந்த பிராமிசரி நோட்டின் அசல் ம.சா.ஆ.6 என்றும் அதன்பின்னரும் பணம் செலுத்தவில்லை என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார்.

5) ம.சா.1 புகார்தாரரின் சாட்சியத்தில் காணப்பட்ட எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் எதிரியிடம் வினவியபொழுது எதிரி பொய்சாட்சி என்றும் இவ்வழக்கு குறித்து எதிரியிடம் வினவியபொழுது பொய் வழக்கு என்றும் எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இருக்கிறதா என்று வினவியபொழுது உண்டு என்றும் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் எதிரி தரப்பில் இரண்டு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு ஒரு சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது.

6) **<u>எதிரி தரப்பு வழக்கும் மற்றும் சாட்சிய சுருக்கமும் பின்வருமாறு:-</u>**

எ.ம.சா.1 எதிரி தனது சாட்சியத்தில், தனக்கு எதிரியை தெரியாது என்றும் தான் அவரிடம் பணம் ஏதும் வாங்கவில்லை என்றும் ம.சா.ஆ.1 காசோலை மற்றும் ம.சா.ஆ.6 பிராமிசரி நோட்டை கொடுக்கவில்லை என்றும் தான் கடந்த 26.11.2017-ம் தேதியில் தனது ஊரான கண்டரமாணிக்கத்திலிருந்து மதுரைக்கு மருத்துவமனைக்கு செல்வதற்காக திருப்பத்தூர் சென்றிருந்தபொழுது தனது கைப்பை தொலைந்துபோய்விட்டது என்றும் அதில் தான் போன் டைரி, ரொக்கம் ரூ.1,000/- (ஆயிரம்)த்தையும், அத்தோடு தன் கணவர் வங்கியிலிருந்து பணம் எடுப்பதற்கு ஏதுவாக இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கண்டரமாணிக்கம் கிளை காசோலை ஒன்றில் கையொப்பம் மட்டும் செய்து வைத்திருந்தேன் என்றும் அந்த காசேலைதான் ம.சா.ஆ.1 என்றும் ம.சா.ஆ.1 காசோலை தன் வங்கிக்கு வசூலுக்கு வந்தால் அதற்கு பணம் ஏதும் செலுத்த வேண்டாம் என்று ஸ்டாப்பேமெண்ட் கடிதத்தை 1.12.2017-ம் தேதி கொடுத்திருக்கிறேன் என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார். எ.ம.சா.2 பல்குனி மார்க்தர்ஷி தனது சாட்சியத்தில், தான் எதிரி கொடுத்த ஸ்டாப் பேமெண்ட் கடிதத்திணை கொண்டு வந்திருக்கிறேன் என்றும் அது எ.ம.சா.ஆ.1 என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார்.

7) <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-</u>

புகார்தாரர் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுநிலை ஐயத்திற்கிடமின்றி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

8) <u>தீர்வு:-</u>

1) புகார்தாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் அவர்கள் புகார்தாரரிடம் கடந்த 25.10.2017-ம் தேதியன்று எதிரி அவரது சொந்த வீடு கட்டும் செலவிற்காக கடனாக ரொக்கம் ரூ.6,20,000/- (ஆறு லட்சத்து இருபதாயிரம்)த்தை பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி போட்டு கொடுப்பதாக ஒப்புக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் ம.சா.ஆ.6 பிராமிசரி நோட்டை எழுதிக்கொடுத்திருக்கிறார் என்றும் புகார்தாரரிடம் கடந்த 27.11.2017-ம் தேதியன்று ம.சா.ஆ.1 காசோலையை எதிரி கொடுத்துள்ளார் என்றும் அதை புகார்தாரர் அன்றே தான் கணக்கு வைத்திருக்கும் பேங்க் ஆப் பரோடா, காரைக்குடி கிளையில் வசூலுக்காக சமர்ப்பித்தபொழுது அது கடந்த 28.11.2017-ம் தேதியிட்ட போதிய பணமில்லை என்ற குறிப்புச்சீட்டுடன் அதன் மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்டுவிட்டது என்றும் இதுசம்மந்தமாக புகார்தாரர் கடந்த 5.12.2017-ம் தேதி எதிரிக்கு ஓர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும் அதை எதிரி கடந்த 6.12.2017-ம் தேதியன்று பெற்றுக்கொண்டு பல பொய்யான விபரங்களை சொல்லி கடந்த 27.12.2017-ம் தேதியன்று ஓர் பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும் அதன்பின்னரும் பணம் செலுத்தவில்லை என்றும் ஏதோ எதிரி கடந்த 26.11.2017-ம் தேதி அவரது சொந்த ஊரிலிருந்து மதுரை செல்வதற்காக திருப்பத்தூர் சென்றபொழுது அவரது பை காணாமல் போய்விட்டது என்றும் அதிலிருந்த பணமும், பூர்த்தி செய்யாமல் கையொப்பம் மட்டும் செய்து வைத்திருந்த ம.சா.ஆ.1 காசோலையும் இருந்தது என்றும் அதனால் அவர் திருப்பத்தூர் பேருந்து நிலையத்திலுள்ள ஓர் பூக்கடையில் ரூ.500/- (ஐநாறு)-ஐ பெற்றுக்கொண்டு மதுரை சென்றதாகவும், அங்கு சென்று அவரது பெரியம்மாவின் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கியிருந்து ஆரோக்கியசாமி என்ற மருத்துவரிடம் சிகிச்சை பெற்றதாகவும் எதிர்வாதம் செய்து வருகிறார் என்றும் ஆனால், எதிரி பூக்கடைக்காரரையும், மருத்துவரையும், அவரது பெரியம்மாவையும் நீதிமன்றத்திற்கு இழுக்க விரும்பவில்லை என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார் என்றும் 1.12.2017-ம் தேதி எதிரி கொடுத்ததாக சொல்லும் ஸ்டாப்பேமெண்ட் கடிதத்தை சமர்ப்பிக்கக்கோரி அழைப்பாணை எ.ம.சா.2-ற்கு அனுப்பப்பட்டபோதிலும் அதைக்கொண்டு வந்து எ.ம.சா.2 சாட்சியம் அளிக்கவில்லை என்றும் மாறாக, அதற்கு

பின்னிட்டு எதிரி கொடுத்ததாக சொல்லும் ஸ்டாப்பேமெண்ட் கடிதம்தான் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றும் கடந்த 1.12.2017-ம் தேதி எதிரி எ.ம.சா.2 வங்கியில் கொடுத்ததாக சொல்லும் ஸ்டாப்பேமெண்ட் கடிதத்தை கொண்டு வரக்கோரி எதிரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவானது குற்றவியல் பல்வகை மனு எண்.858/19 என நம்பராகி நிலுவையிலிருந்தபொழுது அது அவரால் வலியுறுத்தப்படவில்லை என்ற காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்றும் இது எதிரியின் எதிர்வாதத்தின் மீது சந்தேகத்தை எழுப்புகிறது என்றும் என்றும் புகார்தாரர் தன் வழக்கினை நிரூபித்திருக்கிறார் என்றும் வாதிட்டு எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு வேண்டினார்.

2) மாறாக, எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் அவர்கள் புகார்தாரர் சொல்வதுபோல் கடந்த 25.10.2017-ம் தேதியில் எதிரி அவரிடம் பணம் ஏதும் வாங்கவில்லை என்றும் அதற்கு ஆதரவாக ம.சா.ஆ.6 பிராமிசரி நோட்டை எழுதிக்கொடுக்கவில்லை என்றும் ம.சா.ஆ.6-ல் உள்ள கையொப்பமே எதிரியினுடையதல்ல என்றும் கடந்த 26.11.2017-ம் தேதி எதிரி தனது சொந்த ஊரிலிருந்து மதுரைக்கு சென்றபொழுது திருப்பத்தூரில் வைத்து எதிரியின் கைப்பை தொலைந்துபோய்விட்டது என்றும் அதில் பூர்த்தி செய்யப்படாதநிலையில் கையொப்பம் மட்டும் செய்திருந்த எதிரியின் ம.சா.ஆ.1 காசோலையும், மற்றும் ரூ.1,000/- (ஆயிரம்) பணமும், டைரியும் இருந்தது என்றும் புகார்தாரர் தன் அறிவிப்பிலோ, மனுவிலோ எதிரியை எப்படி தெரியும் என்ற விபரத்தை சொல்லவேயில்லை என்றும் ம.சா.ஆ.1 காசோலை காணாமல் போனது குறித்து எதிரி அவரது வங்கியில் கொடுத்திருந்த ஸ்டாப்பேமண்ட் கடிதம்தான் எ.ம.சா.ஆ.1 என்றும் புகார்தாரர் தன் குறுக்கு விசாரணையில் தனக்கு வருமான வரி செலுத்தக்கூடிய அளவிற்கு வருமானம் வரவில்லை என்பதால்தான் வருமான வரி செலுத்தவில்லை என்று சாட்சியம் அளித்திருக்கிறார் என்றும் புகார்தாரருக்கு தாவா கடனை கொடுக்கக்கூடிய அளவிற்கு வசதியே இல்லை என்றும் புகார்தாரர் தன் வழக்கினை நிரூபிக்கவில்லை என்றும் வாதிட்டு எதிரியை விடுதலை செய்யுமாறு வேண்டினார்.

9) புகார்தாரர் தன் வழக்கினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்திருக்கிறாரா என்பது குறித்து பார்க்கும்பொழுது, புகார்தாரர் தம்மை ம.சா.1-ஆக விசாரணை செய்து கொண்டிருக்கிறார். ம.சா.1 புகார்தாரர், தன் முதல்விசாரணையில்,"தன்னிடம் கடந்த 25.10.2017-ம் தேதியன்று எதிரி அவரது சொந்த வீடு கட்டும் செலவிற்காக கடனாக ரூ.6,20,000/- (ஆறு லட்சத்து இருபதாயிரம்)த்தை பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி போட்டு கொடுப்பதாக ஒப்புக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் ஓர் பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்திருக்கிறார் என்றும் அப்பால், புகார்தாரரிடம் கடந்த 27.11.2017-ம் தேதியன்று 457399 என்ற எண்ணுள்ள ரூ.6,20,000/- (ஆறு லட்சத்து இருபதாயிரம்)த்திற்குண்டான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கண்டரமாணிக்கம் கிளை காசோலை ஒன்றை எதிரி கொடுத்துள்ளார் என்றும் அது ம.சா.ஆ.1" என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார். ம.சா.ஆ.6 பிராமிசரி நோட்டை உற்றுநோக்கும்பொழுது அதில்,"புகார்தாரரிடம் கடந்த 25.10.2017-ம் தேதியில் எதிரி கடனாக ரொக்கம் ரூ.6,20,000/- (ஆறு லட்சத்து இருபதாயிரம்)த்தை பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ரூ.1/- வீதம் வட்டி போட்டு கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருப்பதாக" சொல்லப்பட்டிருக்கிறது என்று அறிய முடிகிறது. ம.சா.ஆ.6 பிராமிசரி நோட்டிலுள்ள கையொப்பத்தை எதிரி தம்முடையது அல்ல என்று மறுத்திருக்கிறார். இந்நீதிமன்றம் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 73-ன் கீழ் தனக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில் ம.சா.ஆ.6 பிராமிசரி நோட்டிலுள்ள கையொப்பத்தை எதிரியால் ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பங்களான ம.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பம், கு.வி.மு.ச பிரிவு 251 மற்றும் 313(1)(ஆ)-ன் கீழ் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு எதிரி செய்திருந்த கையொப்பம் ஆகியவைகளோடு ஒப்பிட்டு பார்த்தபொழுது அவைகள் அனைத்தும் ஒரேமாதிரியாக இருக்கிறது என்று மேலெழுந்தவாரியாகவே அறிய முடிகிறது. அதனால், ம.சா.ஆ.6 பிராமிசரி நோட்டிலுள்ள கையொப்பம் எதிரியினுடையதுதான் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ம.சா.ஆ.1 காசோலையை உற்றுநோக்கும்பொழுது அது புகார்தாரருக்கு, எதிரியால் கொடுக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ம.சா.ஆ.1 காசோலையிலுள்ள கையொப்பத்தை எதிரி தம்முடையது என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். ம.சா.ஆ.2 குறிப்புச்சீட்டின் அசலினை உற்றுநோக்கும்பொழுது

ம.சா.ஆ.1 காசோலை போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டிருக்கிறது என்று அறிய முடிகிறது. ம.சா.ஆ.3 புகார்தாரரால் எதிரிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பாகும். ம.சா.ஆ.3 அறிவிப்பை எதிரி ம.சா.ஆ.4 அஞ்சலக ஒப்புதல் அட்டையின் வாயிலாக பெற்றிருக்கிறார் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். ம.சா.1 புகார்தாரர் தனது சாட்சியத்தில், தன்னிடம் ம.சா.ஆ.1 காசோலையை எதிரி கொடுத்திருக்கிறார் என்று சாட்சியம் அளித்திருக்கிற சூழ்நிலையிலும், ம.சா.ஆ.1 காசோலையிலுள்ள கையொப்பத்தை எதிரி அவருடையது என்பதை ஒப்புக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலும் மாண்புமிகு டெல்லி உயர்நீதிமன்றம் Jai Kishan Basoya -Vs.- Canara Bank and others reported in 2017 (2) DCR 676 Delhi High Court 676 பாரா 18, உட்பாரா 18-ல் Our Honourable Supreme Court in Rangappa -Vs.- Sri Mohan, held that once issuance of a cheque and signature thereon are admitted, presumption of a legally enforceable debt in favour of the holder of the cheque arises என்று சொல்லியிருக்கிற தீர்ப்புரையும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஆர்.வெங்கடேசன் -எதிர்- ஷம்ஷாத்பேகம் என்ற வழக்கில் பாரா 12-ல் Once the signature of the respondent is admitted and the cheque had been issued for valid consideration, the burden shifts on the respondent herein, who was the accused to explain under what circumstances the cheque was issued when the account was closed or when there was no sufficient balance in the bank account என்று சொல்லியுள்ள தீர்ப்புரையும் இவ்வழக்கிற்கும் பொருந்தி வருகிறது. அதனால், புகார்தாரர், மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 139-ன் கீழான அனுமானங்களின் அடிப்படையில் ம.சா.ஆ.1 காசோலை Legally enforceable debt-ஐ discharge செய்வதற்காக கொடுக்கப்பட்டது என்பதை புகார்தாரர் நிரூபித்து ருசுப்பிக்கும் பொறுப்பினை எதிரிக்கு மாற்றியிருக்கிறார் (Onus of proof got shifted to the accused) என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10) புகார்தாரரின் வழக்கினை மறுத்தளித்து எதிரி தன் வழக்கினை நிரூபித்திருக்கிறாரா என்பது குறித்து பார்க்கும்பொழுது எதிரி தம்மை எ.ம.சா.1-ஆக விசாரணை செய்து கொண்டிருக்கிறார். எ.ம.சா.1 தனது சாட்சியத்தில், தனக்கு எதிரியை தெரியாது என்றும் தான் அவரிடம் பணம் ஏதும் வாங்கவில்லை என்றும் ம.சா.ஆ.1 காசோலை மற்றும் ம.சா.ஆ.6 பிராமிசரி நோட்டை கொடுக்கவில்லை என்றும் தான் கடந்த 26.11.2017-ம் தேதியில் தனது ஊரான கண்டரமாணிக்கத்திலிருந்து மதுரைக்கு மருத்துவமனைக்கு செல்வதற்காக திருப்பத்தூா் சென்றிருந்தபொழுது தனது கைப்பை தொலைந்துபோய்விட்டது என்றும் அதில் தான் போன் டைரி, ரொக்கம் ரூ.1,000/- (ஆயிரம்)த்தையும், அத்தோடு தன் கணவா் வங்கியிலிருந்து பணம் எடுப்பதற்கு ஏதுவாக இந்தியன் ஓவா்சீஸ் வங்கி, கண்டரமாணிக்கம் கிளை காசோலை ஒன்றில் கையொப்பம் மட்டும் செய்து வைத்திருந்தேன் என்றும் அந்த காசேலைதான் ம.சா.ஆ.1 என்றும் ம.சா.ஆ.1 காசோலை தன் வங்கிக்கு வசூலுக்கு வந்தால் அதற்கு பணம் ஏதும் செலுத்த வேண்டாம் என்று ஸ்டாப்பேமெண்ட் கடிதத்தை 1.12.2017-ம் தேதி கொடுத்திருக்கிறேன் என்றும் சாட்சியம் அளித்திருக்கிறார். ஆனால், எ.ம.சா.ஆ.1 ஸ்டாப்பேமெண்ட் கடிதத்தை உற்றுநோக்கும்பொழுது அது கடந்த 7.3.2018-ம் தேதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய முடிகிறது. எ.ம.சா.ஆ.1-ல் கடந்த 1.2.2017-ம் தேதி எதிரி ஓா் ஸ்டாப்பேமெண்ட் கடிதம் கொடுத்ததாக சொல்லியிருந்தாலும் அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எதிரி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எதிரி அவ்வாறு கொடுத்திருந்தால் அதை ஏன் எ.ம.சா.2 கொண்டு வந்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதற்கு விளக்கம் புகார்தாரா் தரப்பிலும் கேட்கப்படவில்லை. புகார்தாரா் அவ்வாறு கேட்கவில்லை என்றாலும் அதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு எதிரிக்கு இருந்தும் எதிரி அதுசம்மந்தமாக நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. அத்தோடு, எ.ம.சா.1 எதிரி தனது குறுக்கு விசாரணையில் தான் திருப்பத்தூா் பேரூந்து நிலையத்திலுள்ள பூக்கடைக்காரரிடம் ரூ.500/- (ஐநாறு)-ஐ பெற்று மதுரை சென்றதாகவும், அங்கு தன்னுடைய பெரியம்மாளின் வீட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றதாகவும் சாட்சியம் அளித்திருக்கிறார். ஆனால், எ.ம.சா.1 எதிரி மேற்படி பூக்கடைக்காரரை அல்லது அவரது பெரியம்மாவையோ விசாரணை

செய்யவில்லை. அத்தோடு, எதிரி பூக்கடைக்காரரின் பெயரே தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்திருக்கிறார். இது எதிரியின் எதிர்வாதத்தின் மீது சந்தேகத்தை எழுப்பினாலும், ரூ.6,20,000/- (ஆறு லட்சத்து இருபதாயிரம்) போன்ற ஓர் பெருந்தொகையை கடனாக கொடுப்பதற்கு தனக்கு வசதி,வாய்ப்புக்கள் இருக்கிறது என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு புகார்தாரருக்கு இருக்கிறது. ம.சா.1 புகார்தாரர் தன் குறுக்கு விசாரணையில், தனக்கு வருமான வரி செலுத்தும் அளவிற்கு வருமானம் இல்லை என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். புகார்தாரர் தன் மனுவிலோ அல்லது நிருபண வாக்குமூலத்திலோ தான் என்ன தொழில் செய்கிறேன் என்பதையும், தனக்கு எந்தெந்த வழிகளில் வருமானம் வருகிறது என்பதையும் சொல்லவில்லை. அத்தோடு, ம.சா.1 புகார்தாரர் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் ரூ.6,20,000/- (ஆறு லட்சத்து இருபதாயிரம்) தனக்கு எப்படி கிடைத்தது என்பதையும் சொல்லவில்லை. மாண்புமிகு உச்சநீதிமன்றம் In John K.Abraham -Vs.- Simon C.Abraham and another reported in 2014(2) S.C.C 236 our Hon'ble Apex Court held at para 9 it has to be stated that in order to draw the presumption under section 118 read with 139 of Negotiable Instruments Act, the burden was heavily upon the complainant to have shown that he had the required funds for having advanced the money to the accused, that the issuance of cheque in support of the said payment advanced was true and the accused was bound to make the payment as had been agreed while issuing the cheque in favour of the complainant. என்று சொல்லியிருக்கிறது. மேற்படி தீர்ப்புரை இவ்வழக்கிற்கும் பொருந்தி வருகிறது. அத்தோடு, ம.சா.ஆ.1 காசோலையை உற்றுநோக்கும்பொழுது அதில், தேதி, புகார்தாரரின் பெயர் மற்றும் தொகை போன்ற விபரங்கள் ஓர் மையினாலும், எதிரியின் கையொப்பம் மற்றொரு மையினாலும் எழுதப்பட்டிருக்கிறது என்று அறிய முடிகிறது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் In K.Muniraju -Vs.- G.Murugesh reported in 2017 (2) T.L.N.J 402(Crl.) at Para 13 held that a careful perusal of the cheque would also show that the ink used to write the contents of the cheque is different from the ink used in the signature on the

cheque. The Trial Court has also taken note of the said fact and Para 14 held that the above mentioned circumstances, in my considered view, are sufficient to hold that the respondent has rebutted the presumption drawn against him in terms of sections 118 and 139 of Negotiable Instruments Act. என்று சொல்லியிருக்கிறது. மேற்படி தீர்ப்புரையும் இவ்வழக்கிற்கு பொருந்தி வருகிறது. புகார்தாரர் தன் குறுக்கு விசாரணையில் தாவா கடனை எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும்பொழுது கதிரேசன் என்பவர் மூலமாக கொடுத்ததாக சாட்சியம் அளித்திருக்கிறார். ஆனால், புகார்தாரர் மேற்படி கதிரேசனை ஓர் சாட்சியாக விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்சநீதிமன்றம் C.Antony Vs.- K.G.Raghavan Nair reported in 2003 (1) SCC பாரா 7-ல் If we examine the judgment of the two courts below in this appeal in the light of the law laid down by this Court in the above-cited cases, it is to be seen that the trial court came to the conclusion that non-examination of Advocate Vijay Kumar was fatal to the case of the respondent complainant because it is the case of the respondent that he came to know the appellant through the said Vijay Kumar and the amount in question was paid in the office of the said Vijay Kumar. In such a situation, the trial court came to the conclusion that when the appellant has set up a possible defence of having given a blank cheque to Charappa Panicker in regard to a chit transaction, therefore, it was necessary for the respondent complainant to have examined the said Vijay Kumar to establish the fact that Vijay Kumar indeed, persuaded the respondent to advance the cash. We also think this was a very necessary piece of evidence to establish the fact that the respondent had in fact advanced a sum of Rs.26,500 to the appellant. From a perusal of the judgment of the High Court, in this regard, we find that there is absolutely no discussion on this point at all. The non-consideration of this aspect of the case by the High Court, in our opinion, runs

counter to the principles laid down in the above-referred judgments of this Court என்று சொல்லியிருக்கிறது. அதனால், மேற்படி தீர்ப்புரை இவ்வழக்கிற்கும் பொருந்தி வருகிறது. புகார்தாரர் தாவா கடனை கடந்த 25.10.2017-ம் தேதியன்று எதிரிக்கு கொடுத்ததாக சொல்லியிருக்கிறார். அதன்பின்னர், புகார்தாரர் கடந்த 27.11.2017-ம் தேதியன்று எதிரி ம.சா.ஆ.1 காசோலையை கொடுத்ததாக சொல்லியிருக்கிறார். புகார்தாரர் ம.சா.ஆ.6 பிராமிசரி நோட்டை எதிரி எழுதிக்கொடுத்த பின்னர் அவரிடம் பிராமிசரி நோட்டு தொகை,வகையறாக்களை கேட்டதாகவும் அப்பொழுது எதிரி ம.சா.ஆ.1 காசோலையை கொடுத்தார் என்றும்கூட தனது அறிவிப்பிலோ, மனுவிலோ, சாட்சியத்திலோ சொல்லவேயில்லை. அத்தோடு, ம.சா.ஆ.6 பிராமிசரி நோட்டிற்கு பின்னர் எதிரி ம.சா.ஆ.1 காசோலையை கொடுத்தபொழுது புகார்தாரர் எதிரியிடம் வட்டியை கேட்டாரா அல்லது இல்லையா, எதிரி வட்டியை கொடுத்தாரா அல்லது இல்லையா அவ்வாறு புகார்தாரரிடம் வட்டியை எதிரி கொடுக்கவில்லை என்றால் ஏன் அதற்கும் சேர்த்து காசோலை பெறவில்லை என்பதற்கு புகார்தாரர் தரப்பில் எவ்விதமான விளக்கமும் இல்லை. அத்தோடு, புகார்தாரர் தாவா கடனை எதிரிக்கு எங்கு வைத்துக்கொடுத்தேன் என்ற விபரத்தைக் கூட தனது ம.சா.ஆ.3 அறிவிப்பிலோ, மனுவிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவேயில்லை. அத்தோடு புகார்தாரர் தனக்கு எதிரியை எப்படி தெரியும் என்ற விபரத்தையும் தனது ம.சா.ஆ.3 அறிவிப்பிலோ, மனுவிலோ, நிரூபண வாக்கு மூலத்திலோ சொல்லவேயில்லை. மேற்படி சாட்சியங்கள், சட்ட நிலைப்பாடுகளிலிருந்து புகார்தாரரின் வழக்கில் preponderance of probabilities இல்லை என்று அறிய முடிகிறது. மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் in Krishna Janardhan Bhat -Vs.- Dattatraya G.Hegde has held that the standard of proof required on the part of an accused is preponderance of probabilities என்று சொல்லியிருக்கிறது. மேற்படி சாட்சியங்கள், சட்ட நிலைப்பாடுகளிலிருந்து எதிரி, புகார்தாரரின் வழக்கினை மறுத்தளித்து ருசுப்பிக்கும் பொறுப்பினை மறுபடியும் புகார்தாரருக்கே மாற்றியிருக்கிறார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது (Onus of proof got shifted from the accused to the complainant.) புகார்தாரர் தனக்கு ரூ.6,20,000/- (ஆறு லட்சத்து இருபதாயிரம்) போன்ற ஓர் பெருந்தொகையை

கொடுப்பதற்கு வசதி-வாய்ப்புக்கள் இருக்கிறது என்பதற்கு எவ்விதமான ஆவணமும் தாக்கல் செய்யாத சூழ்நிலையிலிருந்தும், புகார்தாரர் ம.சா.ஆ.6 நோட்டில் சாட்சிக்கையொப்பம் செய்த நபரையோ, அதை எழுதிய நபரையோ விசாரிக்காத சூழ்நிலையிலிருந்தும் புகார்தாரர் தன் வழக்கினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே இந்த பிரச்சனை புகார்தாரருக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக, எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானித்து கு.வி.மு.ச பிரிவு 255(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2019-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் திங்கட்கிழமை அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்,
(ஜி.பிரபாகரன்),
நீதித்துறை குற்றவியல் நடுவர்,
விரைவு நீதிமன்றம் காரைக்குடி.

1) **<u>புகார்தாரர் தரப்பு சாட்சிகள்:-</u>**:-	
1) ம.சா.1	ராமநாதன்
2) **<u>புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**	
1) ம.சா.ஆ.1	கடந்த 27.11.2017-ம் தேதியிட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கண்டரமாணிக்கம் கிளையின் 457399 என்ற எண்ணுள்ள காசோலையின் அசல்.
2) ம.சா.ஆ.2	கடந்த 28.11.2017-ம் தேதியில் ம.சா.ஆ.1 காசோலை போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டதற்குண்டான குறிப்புச்சீட்டின் அசல்.
3) ம.சா.ஆ.3	கடந்த 5.12.2017-ம் தேதியில் ம.சா.ஆ.1 காசோலை அதன் மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்டுவிட்டது சம்மந்தமாக அனுப்பப்பட்ட அறிவிப்பின் அலுவலக நகல்.
4) ம.சா.ஆ.4	கடந்த 6.12.2017-ம் தேதியில் ம.சா.ஆ.3 அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டார் என்பதற்குண்டான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல்.
5) ம.சா.ஆ.5	கடந்த 27.12.2017-ம் தேதியில் எதிரி அனுப்பிய பதிலறிவிப்பின் சார்பு நகல்.

6) ம.சா.ஆ.6	கடந்த 25.10.2017-ம் தேதியில் புகார்தாரருக்கு எதிரி எழுதிக்கொடுத்திருக்கிற பிராமிசரி நோட்டின் அசல்.
3) **எதிரி தரப்பு சாட்சிகள்:-**	
1) எ.ம.சா.1	தேவி
2) எ.ம.சா.2	பல்குனிமார்க்தர்ஷி
4) எதிரிதரப்பு சான்றாவணம்:-	
1) எ.ம.சா.ஆ.1	எதிரி கொடுத்த ஸ்டாப்பேமெண்ட் கடிதத்தின் அசல்.
4) நீதிமன்ற சாட்சி: இல்லை	
5) நீதிமன்ற சான்றாவணங்கள்,சான்றுபொருட்கள்:- இல்லை	

ஒப்பம்,
(ஜி.பிரபாகரன்),
நீதித்துறை குற்றவியல் நடுவர்,
விரைவு நீதிமன்றம் காரைக்குடி.

குறிப்பு:-

1. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
2. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. தீர்ப்பு பற்றி புகார்தாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

/ உண்மை நகல் /